21st December 1956]

நல வேலைகள் முடிந்தாய் விட்டது. இனிமேல் வீடுகள் விஷயத்தில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது. ஜில்லா கலெக்டர்கள் மூலம் வீடுகட்ட ஒழுங்கு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி இனிதான் யோசனை செய்யவேண்டும்.

Regional Transport Officers at Madras

* 391 *Q.*—SRI P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) the number of Regional Transport Officers at Madras after 1st November 1956; and

(*b*) the number of Tamil Non-Brahmin Officers (other than Scheduled Caste and Backward Class) if any among them?

THE HON. SRI B. PARAMESWARAN : (*a*) There were twelve Regional Transport Officers on 1st November 1956.

(*b*) One.

SRI P. RANGASWAMI REDDIAR : அவர்களில் மலையாளிகள் எத்தனை பேர் ? கன்னடியர்கள் எத்தனை பேர் ? "பாக்வேர்ட்" கிளாஸி லுள்ளவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI B. PARAMESWARAN : மலையாளிகள் நான்கு பேர்கள். ஷெடியூல் காஸ்ட்டிலுள்ளவர்கள் இரண்டு பேர்கள். பிராமணர்கள் இரண்டு பேர்கள். கிருஸ்துவர் ஒருவர். பாக்வேர்ட் கிளாஸலி லுள்ளவர்கள் ஒருவர்.

SRI P. RANGASWAMI REDDIAR : 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ம் தேதிக்கு முன்பு ஒரு வருஷ காலத்தில் ரீஜனல் டிரான்ஸ் போர்ட் ஆபீஸர்களாக கீழிலிருந்து பிரமோஷன் ஆனவர்கள் எத்தனை பேர் ? அதில் மலையாளிகள் எத்தனை பேர்கள் ? Direct-ஆக Recruit செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI B. PARAMESWARAN : ஜூலை 1953-ல் இருந்து தான் இந்த ஆபீஸர்களை நியமிக்க விதிகள் விதித்து அதன் பிரகாரமே அவர்களை அரசாங்கம் அமர்த்தியிருக்கிறது. 1953-க்கு முன் அமர்த்திய அதிகாரிகள் எல்லாம் தாற்காலீகமாகவே அமர்த்தப்பட்டு இருந்தார்கள். அன்றும்கூட பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனைக் கேட்டு, அதன் உத்தரவைப் பெற்றுதான் அவர்கள் உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டார்கள்.

SRI R. M. PALANIYAPPAN : அவர்களில் ரெட்டியார்கள் எவ்வளவு பேர்கள் என்று சொல்லமுடியுமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : ரெட்டியார்களே கிடையாது.

SRI P. MUNUSWAMI GOUNDER : May I know what is the main function of the Regional Transport Officers?

THE HON. SRI B. PARAMESWARAN : There are too many functions and I cannot define them now unless a separate question is put.

[21st December 1956

Sri K. VINAYAKAM: ஸார், ராஜ்ய சீரமைப்பிற்குப் பிறகு ஆபீஸர்களை அவர்கள் எந்தெந்த மொழியில் பேசுகிறார்களோ அந்தந்த ராஜ்யத்திற்கு அனுப்ப வேண்டுமென்று ஒரு அமைப்பிருந்தது. அதன்படி இந்த நான்கு மலையாளி ஆபிஸர்களை என் கேரளத்திற்கு அனுப்பவில்லை? அதற்கு காரணமென்ன?

The Hon. Sri B. PARAMESWARAN: ஐந்து பேர்கள் இருந்தார்கள். அதில் ஒருவரை மலையாளத்திற்கு அனுப்பியிருக்கிறோம். மலையாளிகள், மற்ற இலாகாக்களில் அநேக அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு தேசங்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தப் பிரகாரமே அவர்கள் பிரிக்கப்பட்டார்கள்.

Sri S. DAIVASIGAMONEY: To put it in plain language, the current rumour is that this Department is being flooded in all sections by Malayalees. Now, at least after the partition of the State, may I request the Hon. Minister to see that such a thing does not happen and that more Tamils are taken in the Department?

The Hon. Sri B. PARAMESWARAN: I think such questions will estrange the feelings of both the States. As far as possible, we are trying to recruit such of those persons as are qualified and we cannot send away such of those persons as are already in the employ of the Government.

Sri A. GOVINDASAMI NAYAGAR: இந்த உத்தியோகங்கள் வழங்குவதில் கம்யூனல் ரெப்ரஸெண்டேஷன் அனுசரிக்கப்பட்டதா? அப்படியானால் பிற்பட்டவர்கள் ஏன் இதில் இடம் பெறவில்லை என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

The Hon. Sri B. PARAMESWARAN: இனிமேல் அப்பிரகாரம்தான் நடக்கும்.

Sri V. BALAKRISHNAN: இந்த நான்கு பேர்கள், அதாவது இந்த நான்கு மலையாளிகள் நிரந்தரமான ஸர்விஸை சேர்ந்தவரா? இல்லை தாற்காலீகமாக எடுக்கப்பட்டவர்களா? நிரந்தரமாயிருந்தால் எந்த வருஷத்தில் அவர்கள் எடுக்கப்பட்டார்கள்?

The Hon. Sri B. PARAMESWARAN: அவர்கள் இப்பொழுது நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். 1955-ம் வருடத்திலிருந்துதான் அவர்கள் காயப்படுத்தப்பட்டிருக்கின்றனர். அதற்கு முன் ஐந்தாறு வருடங்களாக உத்தியோகத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

Sri K. VINAYAKAM: மொத்தத்திலிருந்த மலையாளி ஆபீஸர்கள் ஐந்து பேர்கள். அவர்களில் ஒருவரைத்தான் கேரளத்திற்கு அனுப்ப முடிந்தது. நான்கு பேர்களை நாம் வைத்துக்கொண்டு இருக்கிறோம், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும். இனிமேல், தமிழர்களுக்கே, தமிழ் நாட்டில் பிறந்து, வளர்ந்து, படித்தவர்களுக்கு மாத்திரமே உத்தியோகங்கள் வழங்கப்படும் என்ற உத்திரவாதம் கொடுக்கவும், மலையாளிகளோ, கன்னடியரோ, தெலுங்கரோ தமிழ் நாட்டிலேயே பிறந்தவர்கள் என்று பொய் ரிக்கார்ட் உண்டாக்கி தப்பித்துக்கொள்ளாதபடியும், அவர்களுக்கு வேலை கொடுக்காமல் இருக்க வழி செய்வார்களா?

The Hon. Sri B. PARAMESWARAN: தமிழ் நாட்டு மக்களை எந்தெந்தவிதத்தில் பாதுகாக்க முடியுமோ அப்படிச் செய்ய சர்க்கார் கிஞ்சித்தேனும் தயங்கமாட்டார்கள்.